பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4
28 06 2025 **SATURDAY** 6 30 **PM**

<u>வணக்கம்-மாநிலச் செய்திகள்</u>
<u>தலைப்புச் செய்திகள்</u>

1. அரசு நலத்திட்டங்களின் பயன்கள் அனைவருக்கும் முழுமையாக சென்றடைய வேண்டும் என்பதில் மத்திய அரசு உறுதியுடன் உள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. பிரதமரின் தொலைநோக்குப் பார்வையின் கீழ், இந்தியாவின் ஊடகம் மற்றும் பொழுதுபோக்குத்துறை வளர்ச்சி கண்டு வருவதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்

3. தமிழகத்தில் உள்ள அரசு மருத்துவமனைகளில் அனைத்து மருத்துவப் பணியிடங்களும் நிரப்பபப்பட்டுள்ளதாக மாநில மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன் கூறியுள்ளார்.

4. தமிழகத்தில் நீலகிரி மற்றும் கோவை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் அடுத்த 24 மணி நேரத்தில் கனமழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

5. இந்தியா-இங்கிலாந்து இடையேயான முதலாவது மகளிர் டிவெண்டி டிவெண்டி கிரிக்கெட் போட்டி இன்னும் சற்று நேரத்தில் தொடங்குகிறது

><<<<<<>>>>>><

அரசு நலத்திட்டங்களின் பயன்கள் அனைவருக்கும் முழுமையாக சென்றடைய வேண்டும் என்பதில் மத்திய அரசு உறுதியாக உள்ளது என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

புதுதில்லியில் இன்று ஆச்சாரியார் வித்யானந்த் ஜி மகராஜின் நூற்றாண்டு விழா கொண்டாட்டத்தில் உரையாற்றிய அவர், அனைத்து தரப்பு மக்களும் ஒன்றிணைந்து வளர்ச்சிப் பாதையில் பயணிக்க வேண்டும் என்ற முனைப்புடன் தமது தலைமையிலான அரசு செயல்பட்டு வருவதாக தெரிவித்தார்.

பிரதமரின் அனைவருக்கும் வீட்டு வசதி திட்டம், ஜல் ஜிவன் இயக்கம், ஆயுஷ்மான் பாரத் மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் மற்றும் இலவச உணவு தானிய திட்டம் போன்ற திட்டங்களின் பயன்கள் நாட்டின் கடைக்கோடி மக்களுக்கும் சென்றடைய வேண்டும் என்ற நோக்கில் அரசு நிர்வாகம் செயல்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

நாட்டின் வளர்ச்சியோடு, பாரம்பரியத்தையும் காக்க வேண்டும் என்ற முனைப்போடு மத்திய அரசு செயல்பட்டு வருவதாக பிரதமர் தெரிவித்தார்.

நாட்டில் உள்ள பாரம்பரிய சின்னங்களையும் புனித தலங்களையும் மேம்படுத்துவதில் அரசு கவனம் செலுத்தி வருவதாகவும் அவர் கூறினார்.

**Prakrit** உள்ளிட்ட மொழிகளுக்கு செம்மொழி அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

நாட்டின் தொன்மை சிறப்புமிக்க சுவடிகளை மின்னணுமயமாக்குவதற்கான முயற்சிகளை அரசு மேற்கொண்டு வருவதாகவும் திரு. நரேந்திர மோடி கூறினார்.

ஆச்சாரிய வித்யானந்த் ஜி கற்றுக் கொடுத்த பெருமைமிக்க இந்திய கலாச்சாரம், நவீன காலத்தின் கலங்கரை விளக்கமாக திகழ்கிறது என்று அவர் தெரிவித்தார்.

இந்தியாவின் நாகரிகம் பழம்பெருமை வாய்ந்தது என்றும், ஆன்மிக குருக்கள், ஜீயர்கள், ஆச்சாரியார்கள் போன்றவர்களின் தத்துவ ஞானம் காலம் கடந்து நிற்கக்கூடியவை என்றும் அவர் குறிப்பிட்டார்.

வன்முறைக்கு தீர்வு அகிம்சை வழிமுறையே என்பதை முதன்முதலாக உலகிற்கு உணர்த்திய நாடு இந்தியா என்று அவர் கூறினார்.

ஆச்சாரிய வித்யானந்த் ஜி-யின் தத்துவங்களும், வாழ்க்கையும் ஆன்மிக வழிகாட்டுதலோடு நின்றுவிடவில்லை என்றும், சமுதாயத்தையும், கலாச்சாரத்தையும் சீரமைக்கும் கருவியாக திகழ்கிறது என்றும் திரு. நரேந்திர மோடி தெரிவித்தார்.

**><<<<<<>>>>>><**

பிரதமர் திரு. நரேந்திர மோடியின் தொலைநோக்குப் பார்வையின் கீழ், இந்தியாவின் ஊடகம் மற்றும் பொழுதுபோக்குத்துறை வளர்ச்சி கண்டு வருவதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் மின்னணு பொழுதுபோக்கு உச்சி மாநாட்டில் தாம் கலந்து கொண்டது குறித்து சமூகவலைதளத்தில் பதிவிட்டுள்ள அவர், பொழுதுபோக்கு துறையின் எதிர்காலத்தை வடிவமைப்பதில் முக்கிய மைல்கல்லாக டிஜிட்டல் உச்சி மாநாடு அமைந்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

**><<<<<<>>>>>><**

தமிழகத்தில் உள்ள அரசு மருத்துவமனைகள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் அனைத்து மருத்துவப் பணியிடங்களும் நிரப்பப்பட்டுள்ளதாக மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன் கூறியுள்ளார்.

திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் சிடி. ஸ்கேன் மற்றும் டிஜிட்டல் எக்ஸ்ரே கருவி ஆகியவற்றை மக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்த பின் செய்தியாளர்களிடம் பேசிய அவர், அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் அடுத்த வருடத்தில் ஏற்படும் காலியிடங்களையும் நிரப்பும் வகையில் மருத்துவர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

அரசு மருத்துவமனைகளில் பணியாற்றுவதற்காக தற்போது நியமனம் செய்யப்பட்டுள்ள மருத்துவர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு வருவதால் இன்னும் பத்து நாட்களுக்குள் இவர்கள் அனைவரும் பணிக்கு திரும்புவார்கள் என்றும் திரு. மா. சுப்பிரமணியன் கூறினார்.

(சவுண்ட் பைட் - மா. சுப்பிரமணியன் 51 செகண்டஸ்)

**><<<<<<>>>>>><**

பிரதமர் திரு நரேந்திர மோடி மக்களிடையே மனந்திறந்து பேசும் மன்கி பாத் நிகழ்ச்சி அகில இந்திய வானொலியில் நாளை காலை 11 மணிக்கு ஒலிபரப்பாகிறது.

நாட்டில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் இதனை அஞ்சல் செய்யும்.

பிரதமர் உரை முடிந்தவுடன் அதன் தமிழாக்கத்தை சென்னை அகில இந்திய வானொலி ஒலிபரப்புகிறது.

இது இரவு 8 மணிக்கு மறு ஒலிபரப்பும் செய்யப்படும்.

தமிழகம் மற்றும் புதுச்சேரியில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் இதனை அஞ்சல் செய்யும்.

**><<<<<<>>>>>><**

தமிழகத்தில் வால்பாறை சட்டப்பேரவை தொகுதி காலியாக உள்ளதாக சட்டப்பேரவை செயலகம் அறிவித்துள்ளது.

இத்தொகுதியின் சட்டப்பேரவை உறுப்பினர் அமுல் கந்தசாமி கடந்த 21ஆம் தேதி காலமானதை அடுத்து, இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

**><<<<<<>>>>>><**

தமிழகத்தில் நீலகிரி மற்றும் கோவை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் அடுத்த 24 மணி நேரத்தில் கனமழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு. செந்தாமரைக்கண்ணன் தெரிவித்துள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசிய அவர் இதனை தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் — செந்தாமரைக்கண்ணன் 50 செகண்ட்ஸ்)

இதனிடையே, மேட்டூர் அணையிலிந்து வினாடிக்கு 50 முதல் 75 ஆயிரம் கனஅடி வரை தண்ணீர் திறந்துவிட வாய்ப்புள்ளதால், சேலம், நாமக்கல், கரூர் உள்ளிட்ட 11 மாவட்டங்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - விஜயகுமார் 51 செகண்ட்ஸ்)

><<<<<<>>>>>><

மாவட்டச் செய்திகள்

பெரம்பலூர் மாவட்டம், கீழ்பெரம்பலூரில் ஜல் ஜீவன் இயக்கத்தின் கீழ் கட்டப்பபட்ட புதிய மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி மற்றும் வீடுகளுக்கு குடிநீர் இணைப்பு வழங்கும் பணியை மாநில அமைச்சர் திரு. சிவசங்கர் இன்று தொடங்கி வைத்தார்.

><<<<<<>>>>>><

கோவை மாவட்ட கல்வித்துறை சார்பில் 'கற்றல் அடைவு' குறித்த ஆய்வுக்கூட்டம் அமைச்சர் திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி தலைமையில் நடைபெற்றது.

><<<<<<>>>>>><

மதுரை மாவட்டம், மேற்கு ஊராட்சி ஒன்றிய கிராம ஊராட்சிப் பகுதிகளில் தூய்மைப் பணிகளை மேற்கொள்வதற்கான 36 வாகனங்களை மாநில அமைச்சர் திரு. மூர்த்தி கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

><<<<<<>>>>>><

தென்காசி மாவட்டம், குற்றாலத்தில் உள்ள வெண்ணமடைக்குளத்தில் படகு சவாரியை மாநில அமைச்சர் திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் இன்று தொடங்கி வைத்தார்.

><<<<<<>>>>>><

கன்னியாகுமரி மாவட்டம், பேச்சிப்பாறை ஊராட்சியில் பழங்குடியின மக்களுக்கான வீடு கட்டும் பணிகளை ஆட்சியர் திருமதி. அழகுமீனா இன்று ஆய்வு செய்தார்.

><<<<<<>>>>>><

திருப்பத்தூர் மாவட்டம், ஜோலார்பேட்டை ரயில் நிலையத்தில் விபத்து தடுப்பு குறித்த பாதுகாப்பு ஒத்திகை நிகழ்ச்சி நடைபெற்றது.

**><<<<<<>>>>>><**

திருச்சி மாவட்டத்தில் பாதுகாப்பு துறையில் பணியாற்றி ஓய்வு பெற்றவர்களுக்கான சிறப்பு குறைதீர் முகாம் வரும் திங்கட்கிழமை நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

**><<<<<<>>>>>><**

விளையாட்டுச் செய்திகள்

இந்தியா - இங்கிலாந்து இடையேயான முதலாவது மகளிர் டிவெண்டி டிவெண்டி கிரிக்கெட் போட்டி இன்னும் சற்றுநேரத்தில் தொடங்குகிறது.

நாட்டிங்காமில் நடைபெறவுள்ள இப்போட்டியில் டாஸ் வென்ற இங்கிலாந்து அணி முதலில் பந்து வீச தீர்மானித்துள்ளது..

**><<<<<<>>>>>><**

ஆசிய இளையோர் டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியா இறுதிச்சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

தாஷ்கண்டில் நடைபெற்று வரும் இப்போட்டியின் 15 வயதுக்குட்பட்டோருக்கான அரையிறுதி சுற்றில், இந்தியா 3-1 என்ற ஆட்டக்கணக்கில் தென்கொரியாவை வென்றது

**><<<<<<END>>>>>><**